


**15. 07. 2025**

தலைப்பு செய்திகள்

- **இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு ஷுக்லா உள்ளிட்ட** 4 பேர் Axiom – 4, Space - X Dragon விண்கலம் மூலம் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு புவியை வந்தடைகின்றனர்.
- **பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு செயல்பாடுகளை** தொழில்துறையினர் முன்னெடுத்துச் செல்வதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. நிதின்கட்கரி வலியுறுத்தியுள்ளார்.
- **தமிழக அரசின் மக்கள் நல சேவைகள், அவர்களின்** வசிப்பிடங்களுக்கே நேரில் கொண்டு சேர்க்கும் சிறப்பு திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளதாக, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்
- **பெருந்தலைவர் காமராசரின்** 123-வது **பிறந்தநாள் தமிழகத்தில் இன்று** கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படுகிறது.
- **ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் போட்டிகள் டோக்கியோவில் இன்று** தொடங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**சுபான்ஷு ஷுக்லா**

**இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு ஷுக்லா உள்ளிட்ட** 4 **பேர்** Axiom - 4 விண்கலம் மூலம் இன்று பிற்பகல் 3 மணிக்கு புவியை வந்தடைகின்றனர்.

Axiom - 4 Space - X Dragon விண்கலம் மூலம் அமெரிக்காவின் கலி∴போர்னியா கடற்பகுதிக்குள் இவ்வீரர்கள் இறங்குகின்றனர்.

18 நாள் விண்வெளி பயணத்தை நிறைவு செய்துள்ள விண்வெளி வீரர்கள், சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து தங்களது விண்கலத்தை துண்டித்து Undocking மூலம் நேற்று பூமிக்கு புறப்பட்டனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்த போது சுபான்ஷு ஷுக்லா 7 நுண் புவி ஈர்ப்பு பரிசோதனைகளை மேற்கொண்டு இந்தியாவின் அறிவியல் விண்வெளி தொழில்நுட்பத்தை உலகிற்கு பறைசாற்றினார்.

இந்த பரிசோதனைகள் எதிர்கால கோள் பயணத்திற்கு வகைசெய்வதோடு, விண்வெளியில் நீண்டகாலம் வசிப்பதற்குரிய சாத்தியக் கூறுகளையும் ஆராயும் வகையில் வடிவமைக்கப்பட்டது.

விண்வெளி நிலையத்திலிருந்து பிரியாவிடைபெற்ற சுபான்ஷு ஷுக்லா தமது விண்வெளி பயணம் மிகச்சிறப்பாக அமைந்ததாக மகிழ்ச்சி வெளியிட்டார்.

நாசா, ஆக்சியான் ஸ்பேஸ், இஸ்ரோ ஆகிய 3 விண்வெளி மையங்கள் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த விண்வெளி திட்டப்பயணம் ஆகாஷ்கங்கை என்றழைக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

கடற்படை கருவி

**உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட 6 அதிநீவன** கண்காணிப்பு கருவிகள் மற்றும் வாகனங்களை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு முகமை இந்திய கடற்படையிடம் இன்று வழங்கியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் பாதுகாப்பு ஆய்வகத்தில் நடைபெற்ற நிகழ்வில் இவை கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖

நிதின்கட்கரி

**பெரு நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு** செயல்பாடுகளை தொழில்துறையினர் முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தை மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் 12-வது தேசிய பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், ஊரக பகுதிகளும், நகர்ப்புற பகுதிகளும் சந்திக்கும் பிரச்சனைகள் வெவ்வேறு என்று சுட்டிக்காட்டினார்.

வள ஆதாரங்களில் நவீனதொழில்நுட்பங்கள் முறையாக பயன்படுத்தப்பட்டால் ஊரகப்பகுதிகள் வளர்ச்சியடையும் என்றும் எடுத்துரைத்தார்.

நலிந்த நிலையில் உள்ள மக்களை மேம்படுத்தி அவர்களது திறன்களை அதிகரிப்பதற்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

பல்வேறு பிரிவுகளில் சமூகபொறுப்புணர்வு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய அமைப்புகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் விருதுகளை திரு.நிதின்கட்கரி வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர்** சீன தலைநகர் பெய்ஜிங்கில் அந்நாட்டு அதிபர் **ஸீ ஜின் பிங்கை** சந்தித்து பேசினார்.

இந்தியா சீனா இடையிலான இருதரப்பு உறவுகளில் அண்மை மேம்பாடுகள் குறித்து அதிபரிடம் எடுத்துரைத்ததாக டாக்டர் ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் திரு. நரேந்திரமோடியின் வாழ்த்துக்களை சீன அதிபரிடம் டாக்டர் ஜெய்சங்கர் எடுத்துரைத்தார்.

சீனாவின் Tianjin நகரில் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் டாக்டர் ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

**திறன் மேம்பாட்டு இயக்கம்**

**திறன் மேம்பாட்டு இயக்கத்தின் 10-வது ஆண்டு தினம்** இன்று கொண்டாடப்படுகிறது.

இளைஞர்களுக்கு படைப்பாற்றல் திறன், தொழில்முனைவு, நிலையான வாழ்வாதாரம் போன்றவற்றை உறுதிசெய்யும் வகையில் பிரதமர் திரு.நரேந்திரமோடி 2015-ம் ஆண்டு இந்த இயக்கத்தை தொடங்கிவைத்தார்.

நாட்டிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் திறன்மேம்பாட்டு பணிகள் மூலம் இளையோரின் ஆளுமைக்கு வழிகோலும் மத்திய அரசின் அர்ப்பணிப்புமிகு சேவையை மத்திய திறன்மேம்பாடு தொழில்முனைவோர் துறை அமைச்சர் திரு.ஜெயந்த் சௌத்ரி உறுதி செய்துள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் திறன்மேம்பாட்டு இயக்கம், மகளிர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உலக இளையோர் திறன்மேம்பாட்டு தினம் இன்று கடைபிடிக்கப்படும் நிலையில் செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் திறன்களுடன் இளையோருக்கு ஆளுமை என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு இத்தினம் கொண்டாடப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**தேசிய மாணவர் படை**

**NCC தேசிய மாணவர் படையின் 77-வது ஆண்டு தினம்** இன்று கொண்டாடப்படுகிறது.

இளையோர் இடையே தலைமைத்துவம், சேவை மனப்பான்மை, திறன்மேம்பாடு, நன்னடத்தை போன்றவற்றை மேம்படுத்தும் நோக்குடன் 1948-ம் ஆண்டு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இந்த இயக்கம் தொடங்கப்பட்டது.

நாட்டின் பாதுகாப்பு சார்ந்த நலன்களை இளையோரிடையே முன்னெடுத்துச்செல்லும் வகையிலும், தேசத்தின் அவசர நிலைகளில் முப்படையினருக்கு உதவும் வகையிலும் இந்த இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

77 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள என்.சி.சி. இயக்கம் இளையோரை சிறந்த குடிமக்களாகவும், அனைத்து நிலைகளிலும் தலைமைப்பண்பை ஊக்குவித்து எதிர்கால தலைவர்களாக உருவாக்கவும் வழிகோலுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**ஸ்டார்ட்அப் விருது**

**5-வது தேசிய ஸ்டார்ட்அப் விருதுகளுக்கான** விண்ணப்ப பதிவிற்கு மத்திய தொழில் மற்றும் வர்த்தக மேம்பாட்டுத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

வேளாண்மை, எரிசக்தி, நிதிநுட்பம், வான்வெளி, சுகாதாரம், கல்வி, சைபர்பாதுகாப்பு, அணுகு தன்மை உள்ளிட்ட பிரிவுகளில் ஸ்டார்ட்அப் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

2016-ம் ஆண்டு தொடங்கப்பட்ட ஸ்டார்ட்அப் திட்டத்தின் கீழ் இந்தியாவின் தொழில்முனைவோர் பிரிவு வளர்ச்சி பெற்றுள்ளதோடு, இளையோர், மகளிர், மாணாக்கர் உள்ளிட்டோர் படைப்பாற்றல் திறனுடன் மாபெரும் வளர்ச்சியுடன் முன்னேறி செல்வது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**தமிழக அரசின் மக்கள் நல சேவைகள், அவர்களின்** வசிப்பிடங்களுக்கே நேரில் கொண்டு சேர்க்கும் சிறப்பு திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளதாக, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் லால்புரத்தில் உங்களுடன் ஸ்டாலின் என்ற இத்திட்டத்தை இன்று துவக்கிவைத்து பேசிய முதலமைச்சர், மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப் பெறாதவர்கள், இம்முகாமில் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்றார்.

.. **வாய்ஸ்** ..

குறிஞ்சிப்பாடி அருகே, கொடுக்கன்பாளையத்தில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோல் அல்லாத காலணி பூங்கா ஏற்படுத்தப்படும் என்றும் இதன்மூலம், 12 ஆயிரம் மகளிருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் கூறினார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இன்று தொடங்கப்பட்டு சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை எடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**காமராசர்**

**தமிழக முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர்** காமராசரின் 123-வது பிறந்தநாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி அன்னாருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

சுதந்திர போராட்டத்தில் முன்நின்றதோடு விடுதலைக்கு பின்னர் நாட்டின் முன்னேற்றப்பாதையில் நிகரில்லா தலைவராக திகழ்ந்ததாக தமது சமூக வலைதளப்பதிவில் பிரதமர் கூறியுள்ளார்.

காமராசரின் உயரிய சிந்தனைகளும், உறுதிப்பாடும் சமூக நீதிக்கான உத்வேகமும் அனைவருக்கும் ஊக்கமளிப்பதாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி விடுத்துள்ள செய்தியில் நவீன தமிழகத்தின் தொலைநோக்கு சிற்பி காமராசர் என்று பாராட்டியுள்ளார்.

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், நூற்றாண்டு கல்வி கனவிற்கான அடித்தளத்தை இட்டவர் பெருந்தலைவர் காமராசர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நாளையொட்டி கடலூர் மாவட்டம் சிதம்பரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில், தமிழகம் இன்று அடைந்திருக்கும் வளர்ச்சிக்கு அடிகோலியவர் என்றும், கல்வி கண் திறந்த கர்மவீரர் என்றும் போற்றியுள்ளார்.

கன்னியாகுமரி கடற்கரையில் அமைந்துள்ள காமராசர் மணிமண்டபத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோதங்கராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அன்னாரது சொந்த ஊரான விருதுநகர் மாவட்டத்தில் அவரது நூற்றாண்டு மணி மண்படத்தில் மாநில அமைச்சர் திரு. K.K.S.S.R. ராமச்சந்திரன் மாநில அரசின் சார்பில் மரியாதை செலுத்தினார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படும் இந்நாளையொட்டி பல்வேறு சிறப்பு போட்டிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

**மலை ரயில்**

நீலகிரி மலை ரயிலுக்கு யுனெஸ்கோவின் பாரம்பரிய அந்தஸ்து வழங்கப்பட்டதன் 20 ஆண்டுகள் நிறைவு கொண்டாட்டங்கள் இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**ரோப்கார்**

**பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி** திருக்கோவிலில் ரோப்கார் சேவை பராமரிப்பு பணிகள் காரணமாக இன்றுமுதல் 31 நாட்களுக்கு நிறுத்தப்படுவதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**ஜப்பான் ஓப்பன் பேட்மிட்டன் போட்டிகள்** டோக்கியோவில் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் பி.வி.சிந்து, சாத்விக் சாய்ராஜ், சிராக் ஷெட்டி, லக்ஷயாசென், உன்னட்டிஹூடா உள்ளிட்டோர் இதில் களம்காண்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖